செ.வெ.எண்: 454 **பத்திரிக்கை செய்தி** நாள்: 21/07/2020.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சார்பில், தஞ்சாவூர் மாவட்டத்தில் 2020-21-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களுக்கு கீழ்க்காணும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவராக இருத்தல் வேண்டும்.

2.ஆண்டு வருமானம் ரூ.3,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

4. ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

5. பொதுக்காலக்கடன் திட்டம்/தனி நபர் கடன் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு ரூ.15.00 இலட்சம் கடனுதவி வழங்கப்படுகிறது. ஆய்டு வட்டி விகிதம் 6 %, முதல் 8 % வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

6. பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் கடனுதவி வழங்கப்படுகிறது. ஆண்டு வட்டி விகிதம் 5 %

7. சிறுகடன் வழங்கும் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழு மகளிர் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரையும் அதிகபட்சமாக 15.00 இலட்சம் வரையும் வழங்கப்படுகிறது. கடனுதவி வழங்கப்படும். ஆண்டு வட்டி விகிதம் 4%/ சுயஉதவிக்குழு தொடங்கி 6 மாதங்கள் பூர்த்தியாகி இருக்க வேண்டும். திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) அவர்களால் தரம் (முசயனைபே) செய்யப்பட்டிருக்க வேண்டும்.

8. சிறுகடன் வழங்கும் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள ஆடவருக்கு அதிகபட்ச கடன் ரூ.1.00 இலட்சம் வரையும் ஒரு குழுவிற்கு அதிகபட்ச கடன் தொகை 15.00 இலட்சம் வரையும் வழங்கப்படுகிறது. ஆண்டு வட்டி விகிதம் 5 %

9,கறவை மாடுகள் (2) வாங்க ரூ.60,000/- வரை கடனுதவி வழங்கப்படுகிறது. ஆண்டு வட்டி விகிதம் 5 %.

10. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் மற்றும் அனைத்து கூட்டுறவு வங்கி கிளைகளில் கடன் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம்.

11, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியில் ஒப்படைக்க வேண்டும்.

## சிறு குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைக்க மானியத்துடன் கூடிய கடன் அளிக்கும் திட்டம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த சிறுகுறு விவசாயிகளுக்கு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து பாசன வசதி ஏற்படுத்திக் கொள்ள அதிக பட்சம் ரூ.1.00 இலட்சம் வரை வங்கிக்கடன் மற்றும் அதற்கு இணையான 50%. விழுக்காடு அரசு மாணியம் அதிகபட்சம் ரூ.50,000/- வரை வழங்கப்படுகிறது.

சாதிச்சான்று, வருமானச்சான்று மற்றும் இருப்பிடச்சான்று இணைக்கப்படவேண்டும். விண்ணப்பதாரர் சிறு குறு விவசாயி என்பதற்கான சான்றினை வட்டாட்சியரிடமிருந்து பெற வேண்டும். நில உடமைக்கு ஆதாரமாக கணினிவழி பட்டா மற்றும் அடங்கல் நகல் இருக்க வேண்டும்.

தகுதியுடைய விவசாயிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.

ஒம்/ ம.கோவிந்தராவ்
மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்.